**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF THIRU. R.KATHIRVELU, MINING OF ROUGH STONE AND GRAVEL QUARRY OF 4.42.0HEC (TOTAL CLUSTER AREA 8.38.5 HEC) LOCATED IN S.F.NO. 58/1A, 58/1B, 58/2A, 58/2B,58/3, 58/6, 58/7, 58/8A, 58/8B, 59/2A, 61/1B, 61/2A, 61/2B, 61/3, 61/4A, 61/5A & 61/6, KAGANAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.08.2023 AT 10.00 AM IN M/S.SRI LAKSHMI MAHAL, MAIN ROAD, OPP TO TAHSILDAR OFFICE, VEMBAKKAM VILLAGE AND TALUK, TIRUVANNAMALAI DISTRICT – 604 410.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Dr. M. Priyadharshini | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Dr.P. Kamaraj | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Selvi. R. Anamika | Sub Collector,<br>Cheyyar. |
| 5. | Thiru. M. Mahaboob Khan | Assistant Geologist,<br>AD Mines Office,<br>Tiruvannamalai. |
| 6. | Publics and Environmentalists | 38 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone quarry.

The District Environmental Engineer stated that for obtaining the environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed Rough stone and Gravel Quarry of Thiru. R.Kathirvelu, Mining of Rough Stone and Gravel Quarry in 4.42.0 hect at Kaganam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the minutes will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing was published in The Hindu (English) & Daily Thanthi (Tamil) on 15.07.2023 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed rough stone quarry of Thiru. R.Kathirvelu, Mining of Rough Stone and Gravel Quarry.

Further, the District Environmental Engineer has informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the Environment Impact Assessment Authority.

The District Revenue Officer requested the project proponent to explain the EIA study conducted by them to the public in detail.

On behalf of the project proponent Thiru. Baburaj, the Consultant, M/s. Creative Engineers &Consultants, Chennai welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

Then the Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

The following are the views represented by the public.

1. **Thiru. Vijayakumar, Kaganam Village.**

He said that Mining have been set up so far are doing many benefits to their panchayat and there is no harm due to this. Even now, it has set up a drinking water RO Plant with a capacity of 500 liters. So there is no harm to them.

2. **Thiru.S. Sathish Kumar, Kaganam Village.**

He said that the quarry management has agreed to provide all the necessary facilities to their town. A water treatment plant has been set up to solve the main problem of drinking water. They have also arranged necessary job opportunities to the people. So there is no impact from this quarry. He ended his speech by saying thank you for the opportunity.

3. **Thiru. Suresh, Karandhai Village.**

He said, "My first salutation to the government officials who have come here. I don't know who owns this quarry. I have never seen him in person. Now they have something called a feedback meeting here. He said that this public hearing could be held at the site where the quarry is to be located. The Gram Sabha meeting is held in the respective village and likewise this meeting may be held in or near the concerned village. I am not denying here that the government road in our village is very good. But we could not use that road today. There are many accidents on that road. He had informed that there was no wild animals in this village and only ordinary domestic animals. But for us those domestic animals are our primary economy. You had said that we had selected five places in that area and conducted irrigation. Can you tell which places they are? These quarries have some advantages. It can be said that taxes like GST are available to the government as well. But he said that in the next ten years there will be shortage of water for the people of our village and in the next ten years all the people living in this village will go to other places as refugees. It is not known what steps the government will take to change this situation. He also said that the

people of our town were not informed that this consultation meeting was being held here."

According to the District Environmental Engineer who responded to this, we had published a notice about this consultation meeting in both Tamil and English newspapers one month before the public consultation meeting as per the rules of the Central Government. He also mentioned that the announcement was made through loudspeaker a day before the meeting.

The District Environmental Engineer explained that as per the rules of the Central Government, this consultation meeting is being held within a radius of five kilometers from the place where the quarry is located.

The person also said that the noise of blasting in this quarry also vibrates in his house.

Responding to this, the District Environmental Engineer said that their comments will be recorded and sent to the State Environmental Commission.

**4. Thiru. Chandhiran, Kaganam Village.**

He said,"I would like to inform you that we have no objection to the establishment of this quarry as the place where this quarry is located is two to three kilo meters away from our village. Thank You.

**5. Thiru.R. Ravi, Kaganam Village.**

He said,"No problem has been caused by the quarries conducted so far. So he concluded his speech by saying that I have no objection to the establishment of this quarry."

**6. Thiru. Sundharaiyar, Kaganam Village.**

He said,"I hope the government will give permission to set up this quarry only after conducting scientific tests. He concluded his speech by saying that I am not affected by this."

**The following 14 members of the public have expressed their opinion in writing that they have no objection to the operation of this quarry. They have also requested to provide them with employment opportunities in the proposed quarry.**

| S.No | Name | Place |
|---|---|---|
| 1 | K. Ramakrishna | Hyderabad |
| 2 | K.Sri Devi | Hyderabad |
| 3 | B. Durga Prasad | Hyderabad |
| 4 | A. Gopal Reddy | Hyderabad |
| 5 | T. Anil Reddy | Telegana |
| 6 | K. Chary | Telegana |
| 7 | S. Ankaih | Andhra pradesh |
| 8 | K. Govardhan | Hyderabad |
| 9 | Paloju Sydaiah | Hyderabad |
| 10 | A.P. Rajendiran | Andhra pradesh |
| 11 | B. Munikrishna | Andhra pradesh |
| 12 | A. Ramakrishna | Hyderabad |
| 13 | S.K. Karimulla | Andhra pradesh |
| 14 | S.K. Rahman | Andhra pradesh |

Thiru. Suresh, Karanthai Village, Vembakkam Taluk, Tiruvannamalai District has tagged in TNPCB website, stating that the village public has not participated in the Public Hearing meeting and requested to conduct the meeting again in the village itself. But it is submitted that Twenty public from the village has participated in the meeting and signed in the attendance register.

**Thereafter no views/comments were raised.**

This public hearing process came to an end with the vote of thanks by Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 15.07.2023 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 4 & 38 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting and social media - 15 numbers.

| | | |
|---|---|---|
| DEE/TNPCB,<br>Tiruvannamalai. | Sub Collector,<br>Cheyyar. (3/6) | District Revenue Officer,<br>Tiruvannamalai. (3/6) |

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், காகணம் கிராமம், புல எண். 58/1A, 58/1B, 58/2A, 58/2B,58/3, 58/6, 58/7, 58/8A, 58/8B, 59/2A, 61/1B, 61/2A, 61/2B, 61/3, 61/4A, 61/5A & 61/6,4.42.0 ஹெக்டேர் (மொத்த கூட்டுபரப்பளவு 8.38.5 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திள்/R. கதிர்வேலு கல் மற்றும் கிராவல் குவாரி நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு 18.08.2023 அன்று தி/ள். ஸ்ரீ லட்சுமி மஹால், மெயின்ரோடு, தாலுக்கா அலுவலகம் எதிரில், வெம்பாக்கம் கிராமம் & வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

பங்கேற்றோர்:

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவர். மு. பிரியதர்ஷினி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | முனைவர்.பா. காமராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | செல்வி. R. அனாமிகா | சார் ஆட்சியர்,<br>செய்யார் |
| 5. | திரு. மு. மஹபுப்கான் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (38 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்கவந்துள் பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசுகட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், காகணம் கிராமத்தில் மொத்தம் 4.42.0 ஹெக்டர் பரப்பளவில் தி/ள்.R. கதிர்வேலு கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். R. கதிர்வேலுகல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். ஸ்ரீலட்சுமிமஹால்18.08.2023அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறுமென தி இந்து மற்றும் தினத்தந்தி செய்தி தாள்களில் 15.07.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் தொழிற்சாலை நிர்வாதத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு. பாபுராஜ், ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும், தி/ள். கிரியேட்டிவ் இஞ்சினியர்ஸ் & கன்சல்டன்ஸ், சென்னை நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு. விஜயகுமார், காகணம் கிராமம்</u>

இவர்கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் விஜயகுமார். நான் காகனம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இதுவரை அமைக்கப்பட்டிருந்த மைன்ஸ் நிறுவனங்கள் எங்களது ஊராட்சிக்கு பலநன்மைகள் செய்து கொண்டிருக்கிறது, இதனால் எவ்வித பாதிப்பும் இல்லை. தற்போது கூட 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆர்வோ பிளான்ட் என்கிற சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தந்துள்ளது. அதனால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

2. <u>திரு. S.சதிஷ்குமார், காகணம் கிராமம்.</u>

இவர்கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். நான் ககணத்தில் இருந்து வந்திருக்கிறேன். எங்கள் ஊருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கிறேன் என்று கூறியுள்ளனர். முக்கிய பிரச்சனையான குடிதண்ணீர் பிரச்சனையை சரி செய்வதற்கு தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தந்துள்ளனர். மக்களுக்கு தேவையான வேலை வாய்ப்புகளையும் தந்துள்ளனர். எனவே இந்த குவாரியால் எந்த ஒரு பாதிப்பும் இல்லை. வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

3. <u>திரு.சுரேஷ், கரந்தை கிராமம்,</u>

இவர்கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். இங்கு வருகை புரிந்துள்ள அரசு அலுவலர்களுக்கு என் முதற்கண் வணக்கம். இந்த கல்குவாரியின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. நான் அவரை நேரடியாக இதுவரை பார்த்ததில்லை. இப்பொழுது இங்கு கருத்து கேட்பு கூட்டம் என்று ஒன்றை வைத்துள்ளனர். இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது குவாரி எங்கு அமையவிருக்கிறதோ அங்கேயே நடத்தி இருக்கலாம் என்றுகூறினார். கிராமசபை கூட்டம் அந்தந்த கிராமத்திலேயே நடைபெறுகிறது அதைப்போலவே இந்த கூட்டத்தையும் அந்த சம்பந்தப்பட்ட கிராமத்திலோ அல்லது அதன் அருகிலோ நடத்தி இருக்கலாம். எங்கள் கிராமத்தில் அரசால் அமைக்கப்பட்ட சாலை மிகவும் நன்றாக உள்ளது என்பதை நான் இங்கு மறுக்கவில்லை. ஆனால், இன்று அந்த சாலையை எங்களால் பயன்படுத்த இயலவில்லை. அந்த சாலையில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டுகின்றன. இந்த கிராமத்தில் வனவிலங்குகள் எதுவும் இல்லை சாதாரணமான வீட்டு விலங்குகள் தான் உள்ளது என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் எங்களை பொறுத்தவரை அந்த வீட்டு விலங்குகள் தான் எங்கள் முதன்மை பொருளாதாரமாக உள்ளது. அந்தப் பகுதியில் ஐந்து இடங்களை தேர்ந்தெடுத்து நீராய்வு செய்திருந்தோம் என்று கூறியிருந்தீர்கள். அவை எந்த எந்த இடங்கள் என்று கூற முடியுமா? இந்த

குவாரிகளால் சில நன்மைகள் நடக்கின்றன. அரசாங்கத்திற்கும் ஜி.எஸ்.டி போன்ற வரிகள் கிடைக்கின்றன என்று கூறலாம். ஆனால் எங்கள் கிராம மக்களுக்கு அடுத்த பத்து ஆண்டுகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் இன்னும் பத்து ஆண்டுகளில் இந்த கிராமத்தில் வசிக்கும் அனைத்து மக்களும் அகதிகளாக வேறு இடங்களுக்கு செல்லும் நிலை ஏற்படக்கூடும் என்று கூறினார். இந்த நிலைமையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று தெரியவில்லை. மேலும் இந்த கருத்து கேட்பு கூட்டம் இங்கு நடைபெறுகிறது என்று எங்கள் ஊர் மக்களுக்கு முன்னறிவிப்பு செய்யப்படவில்லை என்று கூறினார்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் மத்திய அரசின் விதிப்படி பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு செய்தித்தாள்களிலும் இந்த கருத்து கேட்பு கூட்டம் குறித்த அறிவிப்பை வெளியிட்டு இருந்தோம். மேலும் கூட்டம் நடப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பே ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பும் செய்யப்பட்டு இருந்தது என்பதை குறிப்பிட்டார்.

அதற்கு பதில் அளித்த அந்த நபர் கிராம சபை கூட்டம் அந்தந்த கிராமத்திலேயே நடைபெறுவது போல சம்பந்தப்பட்ட கிராமத்திலேயே இந்த கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி இருக்கலாமே? என்று வினாவினார்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் மத்திய அரசின் விதிப்படி குவாரி அமையவுள்ளஇடத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் சுற்றளவில் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுகிறது என்று விளக்கினார்.

மேலும் அந்த நபர் கூறுகையில், இந்த குவாரியில் வைக்கும் வெடி சத்தமானது எங்கள் வீட்டிலும் அதிர்வை ஏற்படுத்துகிறது என்றார்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தங்களது கருத்துகள் பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார்.

4. <u>திரு. சந்திரன், காகணம் கிராமம்.</u>

இவர்கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். இந்த குவாரி அமைந்துள்ள இடமானது எங்கள் கிராமத்தில் இருந்து இரண்டு மூன்று கிலோமீட்டர் தொலைவில் இருப்பதால் இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எவ்வித ஆட்சபனையும் இல்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

5. <u>திரு.ஆர். ரவி, காகணம் கிராமம்.</u>

இவர்கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். இதுவரை நடத்தி வந்த குவாரிகளால் எவ்வித பிரச்சனையும் ஏற்படவில்லை. எனவே இந்த குவாரி அமைவதில் எந்தவித ஆட்சபணையும் எனக்கு இல்லை என்று கூறிதனது உரையை முடித்துக் கொண்டார்.

6. <u>திரு. சுந்தரையர், காகணம் கிராமம்.</u>

இவர் கூறுகையில், அரசு விஞ்ஞான பூர்வமாக பரிசோதனை செய்த பிறகே இந்த குவாரியைஅமைக்க அனுமதி தரும் என்று நம்புகிறேன். இதனால் எவ்வித பாதிப்பும் எனக்கு இல்லைஎன்று கூறிதனது உரையை முடித்துக் கொண்டார்.

**பொதுமக்கள் 14 நபர்கள் எழுத்துமூலமாக தங்ளுக்கு இந்தகுவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் அமையயிருக்கும் குவாரியில் தங்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரும்படியும் கேட்டுக் கொண்டுள்ளனர்**

| வ.எண் | பெயர் | ஊர் |
|---|---|---|
| 1 | க.ராமகிருஷ்ணா | ஐதராபாத் |
| 2 | க. தேவி | ஐதராபாத் |
| 3 | பி. துர்காபிரசாத் | ஐதராபாத் |
| 4 | அ. கோபால்ரெட்டி | ஐதராபாத் |
| 5 | ட. அனில்ரெட்டி | தெலங்கானா |
| 6 | க. சாரி | தெலங்கானா |
| 7 | எஸ். அங்கய்யா | ஆந்திராபிரதேஷ் |
| 8 | க. கோவர்தன் | ஐதராபாத் |
| 9 | பி. சயிதய்யா | தெலங்கானா |
| 10 | எ.பி. ராஜேந்திரன் | ஆந்திராபிரதேஷ் |
| 11 | ப. முனிகிருஷ்ணா | ஆந்திராபிரதேஷ் |
| 12 | அ. ராமகிருஷ்ணா | ஐதராபாத் |
| 13 | எஸ்.கே.கரிமுல்லா | ஆந்திராபிரதேஷ் |
| 14 | எஸ்.கே.ரஹமான் | ஆந்திராபிரதேஷ் |

திரு. சுரேஷ், கரந்தை கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில், குவாரி அமையவிருக்கும் கிராம பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அதனால் மீண்டும் கிராமத்திலேயே கூட்டத்தை நடத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இக்கூட்டத்தில் குவாரி அமையவிருக்கும் காகணம் கிராமத்தைச் சேர்ந்த 20 பொதுமக்கள் கலந்து கொண்டு வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளனர்.

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.15.07.2023).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 38 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 15 மனுக்கள்.

| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை | சார் ஆட்சியர்,<br>செய்யார் | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை |
|---|---|---|

(5/6)